517

51

கொங்கணர் அருளிய

வாலைக்கும்மி

உரோமரிஷி ஞானம்

அ. இரங்கசாமிமுதலியார் ஸன்ஸ்

சென்னை:

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பித்தது.

1933

O-,85MKO,V
N33
120222

உ

கடவுள் துணை

கோங்கணர் அருளிச்செய்த

வாலைக்கும்மி.

உரோமரிஷி ஞானமும் அடங்கியது.

அ. இரங்கசாமி முதலியார் ஸன்ஸ்

சென்னை பூமகள்விலாச அச்சுக்கூடம்

1933

உ

சிவமயம்

வாலைக்கும்மி

விநாயகர் துதி

பின்முடுகு-வெண்பா

கல்விநிறைவாலைப்பெண் காதலியென்றோதுகின்ற
செல்வியின்மேற்கும்மிதனைச் செப்புதற்கே-நல்விசய
நாதனின்சொல்வேனஞ்சு போதன்மிஞ்சிமானகஞ்ச
பாதம்வஞ்சநெஞ்சினில் வைப்பாம்.

கும்மி

சத்திசடாதரி வாலைப்பெண்ணுமந்த
வுத்தமிமேற்கும்மிப் பாட்டுரைக்க
வித்தைக்குதவிய வொற்றைக்கொம்பாம்வாலை
சித்திவிநாயகன் காப்பாமே. 1

சரஸ்வதி துதி

சித்தர்கள்போற்றிடும் வாலைப்பெண்ணுமந்த
சத்தியின்மேற்கும்மிப் பாட்டுரைக்க
தத்திமித்தோமென வாடுஞ்சாஸ்வதி
பத்தினிபொற்பதங் காப்பாமே. 2

சற்குரு துதி

எங்கும்நிறைந்தவள் வாலைப்பெண்ணுமாலின்
தங்கையின்மேற்கும்மி பாடுதற்குக்
கங்கையணிசிவ சம்புவாஞ்சற்குரு
பங்கயப்பொற்பதங் காப்பாமே. 3

சுப்பிரமணியர் துதி

ஞானப்பெண்ணுமருள் சோதிப்பெண்ணுமாதி
வாலைப்பெண்மேற்கும்மி பாடுதற்கு

மானைப்பெண்ணுக்கிய வல்லிக்கிசைந்திடும்
பாலமுருகேசனுங் காப்பாமே. 4

விஷ்ணு துதி

ஆண்டிப்பெண்ணும்ராச பாண்டிப்பெண்ணும்வாலை
அம்பிகைமேற்கும்மி பாடுதற்கு
காண்டீபனும்பணி பூண்டவன்வைகுந்தம்
ஆண்டவன்பொற்பாதங் காப்பாமே. 5

நந்தீசர் துதி

அந்தரிசுந்தரி வாலைப்பெண்ணுமந்த
அம்பிகைமேற்கும்மி பாடுதற்குச்
சிந்தையில்முந்திநல் விந்தையாய்வந்திடும்
நந்தீசர்பொற்பதங் காப்பாமே. 6

நூல்

தில்லையில்முல்லையி லெல்லையுளாடிய
வல்லவள்வாலைப்பெண் மீதினிலே
சல்லாபகும்மித் தமிழ்ப்பாடவரும்
தொல்லைவினைப்போகும் வாலைப்பெண்ணே. 7

மாதாபிதாகூட இல்லாமலேவெளி
மண்ணும்விண்ணுமுண்டு பண்ணவென்று
பேதைப்பெண்ணுமுதல் வாலைப்பெண்ணுளென்று
புகுந்தாளிந்தப் புவிமயக்கம். 8

வேதமும்பூதமுண் டானதுவும்வெளி
ஞானசாஸ்திர மானதுவும்
நாதமுங்கீதமுண் டானதுவும்வழி
நான்சொல்லக்கேளடி வாலைப்பெண்ணே. 9

முந்தச்செகங்களுண் டானதுமுதல்
தெய்வமுந்தேவருண் டானதுவும்

விந்தையாய்வாலையுண் டானதுவும்ஞான
விளக்கம்பாரடி வாலைப்பெண்ணே. 10

அரிக்குமுந்தின தவ்வெழுத்தாம் பின்னும்
அரிக்குள்நின்றது மஞ்செழுத்தாம்
தரிக்குமுந்தின தஞ்செழுத்தாம்வாசி
பரிக்குள்நின்றது மஞ்செழுத்தாம். 11

ஆதியிலைந்தெழுத் தானாள்வாலைப்பெண்
ஐந்தெழுத்துமென்று பேரானால்
நாயிலூமை யெழுத்திவள்தானல்ல
ஞானவகையிவள் தானானாள். 12

ஊமையெழுத்தே யுடலாச்சுமற்றும்
ஓமென்றெழுத்தே யுயிராச்சு
ஆமிந்தெழுத்தை யறிந்துகொண்டுவிளை
யாடிகும்மி யடியுங்கடி. 13

செகம்படைத்தது மஞ்செழுத்தாம்பின்னும்
சிவன்படைத்தது மஞ்செழுத்தாம்
யுகமுடிந்தது மஞ்செழுத்தாம்பின்னும்
உற்பனமானது மஞ்செழுத்தாம். 14

சாத்திரம்பார்த்தாலுந் தானுமென்னவேதந்
தானுமேபார்த்திருந் தாலுமென்ன
சூத்திரம்பார்த்தல்லோ ஆளவேணுமஞ்சு
சொல்லையறிந்தல்லோ காணவேணும். 15

காணாதுகிட்டாது எட்டாதுஅஞ்சில்
காரியமில்லையென் றேநினைத்தால்
காணாதுங்காணலா மஞ்செழுத்தாலதில்
காரியமுண்டு தியானஞ்செய்தால். 16

ஆயனுமைந்து வெழுத்துக்குள்ளேயறி
வாயனுமைந்து வெழுத்துக்குள்ளே

வாயனுமைந்து வெழுத்துக்குள்ளேயிந்த
வாலையுமைந்து வெழுத்துக்குள்ளே. 17

அஞ்செழுத்தானது மெட்டெழுத்தாம்பின்னு
மைம்பத்தோரட்சரந் தானுச்சு
செஞ்செழுத்தாலே நினையாமலந்த
நிசந்தெரியுமோ வாலைப்பெண்ணே. 18

எய்க்குதேய்க்கு தஞ்செழுத்துயதை
எட்டிப்பிடித்துக்கோ னிரண்டெழுத்தை
நோக்கிக்கொள்வாசியை மேலாகவாசி
நிலையைப்பாரடி வாலைப்பெண்ணே. 19

சிதம்பரசக்கரந் தானறிவாரிந்தச்
சீமையிலுள்ள பெரியோர்கள்
சிதம்பரசக்கர மென்றுலதற்குள்
தெய்வத்தையல்லோ வறியவேணும். 20

மனதுறுதியு மில்லாவிடில்வழி
மாறுதல்சொல்லி யென்னசெய்வாள்
மனதுறுதியும் வைக்கவேணும்பின்னும்
வாலைகிருபையுண் டாகவேணும். 21

இனிவெளியினிற் சொல்லாதேயெழில்
இம்மட்டுமந்த வரிவழிக்கே
கனிமொழிச்சியே வாருங்கடிகொஞ்சங்
கருவைச்சொல்லுவேன் கேளுங்கடி. 22

ஊத்தைச்சடலமென் றெண்ணுதேயிது
உப்பிட்டபாண்டமென் றெண்ணுதே
பார்த்தபேருக்கு ஊத்தையில்லையிதைப்
பார்த்துக்கோவுந்த னுடலுக்குள்ளே. 23

உச்சிக்குநேரேயுண் ணுவுக்குமேல்நிதம்
வைத்தவிளக்கு எரியுதடி

அச்சுள்விளக்கு வாலையடியவி
யாமலெரியுது வாலைப்பெண்ணே. 24

எரியுதுஅறு வீட்டிலேயதி
லெண்ணையில்லையமிர்தந் தண்ணியில்லை
தெரியுதுபோக வழியுமில்லைபாதை
சிக்குதுசிக்குது வாலைப்பெண்ணே. 25

சிலம்பொலியென்னக் கேட்குமடிமெத்த
சிக்குள்ளபாதை துடுக்கமடி
வலம்புரிச்சங்க மூதுமடிமேலே
வாசியைப்பாரடி வாலைப்பெண்ணே. 26

வாசிப்பழக்க மறியவேணுமறு
மண்டலவீடுகள் கட்டவேணும்
நாசிவழிக்கொண்டு யோகமும்வாசியும்
நாட்டத்தைப்பாரடி வாலைப்பெண்ணே. 27

முச்சுடரான விளக்குள்ளேமூல
மண்டலவாசி பழக்கத்திலே
எச்சுடராகி யந்தச்சுடர்வாலை
இவள்விடவேறில்லை வாலைப்பெண்ணே. 28

சுடாமல்வாலை யிருக்கிறதும்பரி
சுத்தசிவனுக்குள் ளானதினல்
விடாமல்வாசிப் பழக்கத்தைப்பாருநாம்
மேல்வீடுகாணலாம் வாலைப்பெண்ணே. 29

மேல்வீடுகண்டவன் பாணியடிவிண்ணில்
விளக்கில்நின்றவள் வாணியடி
தாய்வீடுகண்டவன் ஞானியடிபரி
தாண்டிக்கொண்டவன் பட்டாணியடி. 30

அத்தியிலேகாம் பத்தியிலேமனம்
புத்தியிலேநடு மத்தியிலே

நெற்றிசதாசிவ மென்றுசொன்னேனுந்தன்
நிலைமையைப்பாரடி வாலைப்பெண்ணே. 31

அழுத்திலேசொல்லஞ் செழுத்திலேநானும்
வழுத்தினேன்ஞானப் பழக்கத்திலே
கழுத்திலே மயேஸ்வரனுமுண்டு
கண்டுபாரடி வாலைப்பெண்ணே. 32

அஞ்சிலேபிஞ்சிலே வஞ்சியரேநிதம்
கொஞ்சிவிளையாடும் வஞ்சியரே
நெஞ்சிலேருத்திரன் சூழிருப்பான்
நேருடனுமடி வாலைப்பெண்ணே. 33

தொந்தியிலேநடுப் பந்தியிலேதிடச்
சிந்தையிலேமுந்தி யுந்தனுடன்
உந்தியில்விஷ்ணுவுந் தானிருப்பாரிதை
உண்மையாய்ப்பாரடி வாலைப்பெண்ணே. 34

ஆலத்திலேயிந்த ஞாலத்திலேவருங்
காலத்திலேயனு கூலத்திலே
மூலத்திலேபிரமனுந் தானிருந்துவாசி
முடுக்கிறன்பிண்டம் பிடிக்கிறன். 35

தேருண்டுஅஞ்சூறு ஆணியுண்டுஅதில்
தேவருமுண்டு சங்கீதமுண்டு
ஆருண்டுபாரடி வாலைத்தெய்வமதில்
அடக்கந்தானடி வாலைப்பெண்ணே. 36

ஒன்பதுவாசல் கோட்டையுண்டுஅதில்
உள்ளேநிலைக்கார ரஞ்சுபேராம்
அன்புடனேபரி காரர்களாறுபேர்
அடக்கந்தானடி வாலைப்பெண்ணே. 37

இந்தவிதத்திலே தேகத்திலேதெய்வம்
இருக்கையில்புத்திக் கறிக்கையினல்

சந்தோஷவாலையைப் பாராமல்மனிதர்
சாகிறதேதடி வாலைப்பெண்ணே. 38

நகாரதிஷ்டிப்பு ஆனதினால்நடு
வானவகார நயமாச்சு
உகாரமுச்சி சிரசாச்சுஇதை
உற்றுப்பாரடி வாலைப்பெண்ணே. 39

வகாரமானது ஓசையாச்சுஅந்த
மகாரமானது கெற்பமாச்சு
சிகாரமானது மாய்கையாச்சுஇதை
தெளிந்துபாரடி வாலைப்பெண்ணே. 40

ஓமென்றவட்சரந் தானுமுண்டதற்கு
ஊமையெழுத்து மிருக்குதடி
நாமிந்தெழுத்தை யறிந்துகொண்டோம்விளை
யாடிப்பாரடி வாலைப்பெண்ணே. 41

கட்டாதகாளையைக் கட்டவேணுமாசை
வெட்டவேணும்வாசி யொட்டவேணும்
எட்டாதகொம்பை வளைக்கவேணுங்காய
மென்னைக்கிருக்குமோ வாலைப்பெண்ணே. 42

இருந்தமார்க்கமாய்த் தானிருந்துவாசி
ஏற்காமலேதா னடக்கவேணுந்
திரிந்துவோடி யலைந்துவந்துதேக
மிறந்துபோச்சுதே வாலைப்பெண்ணே. 43

பூத்தமலராலேபிஞ்சுமுண்டு அதில்
பூவில்லாபிஞ்சு மனேகமுண்டு
மூத்தமகனாலே வாழ்வுமுண்டுமற்ற
மூன்றுபேராலே யழிவுமுண்டு. 44

கற்புள்ளமாதர் குலம்வாழ்கநிறை
கற்பை யழித்தவரேவாழ்க

சிற்பரனைப்போற்றிக் கும்மியடிகுரு
தற்பரனைப்போற்றிக் கும்மியடி. 45

அஞ்சிலேரண் டழிந்ததில்லையஞ்
சாறிலேயுநா லொழிந்ததில்லை
பிஞ்சிலேபூவிலே துஞ்சுவதுஅது
பேணிப்போடலாம் வாலைப்பெண்ணே. 46

கையில்லாக்குட்டையன் கட்டிக்கிட்டானிரு
காலில்லாநெட்டையன் முட்டிக்கிட்டான்
ஈயில்லாதேனெடுத் துண்டுவிட்டானது
இனிக்குதில்லையே வாலைப்பெண்ணே. 47

மேலூருக்கோட்டைக் காதரவாய்நன்றாய்
விளங்குக்கன்னனூர் பாதையிலே
காலூருவம்பலம் விட்டதினாலது
கடுநடையடி வாலைப்பெண்ணே. 48

தொண்டையுள்முக்கோணக் கோட்டையிலே
தொத்திக்கொடிமரம் நாட்டையிலே
சண்டைசெய்துவந்து ஓடிப்போனான்கோட்டை
வெந்துதணலாச்சு வாலைப்பெண்ணே. 49

ஆசைவலைக்கு லகப்பட்டதும்வீடு
அப்பவேவெந்து அழிந்திட்டதும்
பாசவலைவந்து மூடியதும்வாலை
பாதத்தைப்போற்றடி வாலைப்பெண்ணே. 50

அன்னமிருக்குது மண்டபத்தில்விளை
யாடித்திரிந்து ஆண்புலியும்
இன்னமிருக்கு தஞ்சுகிளியதை
யெட்டிப்பிடிக்குது மூன்றுகிளி. 51

தோப்பிலேமாங்குயில் கூப்பிடுதேபுது
மாப்பிள்ளைவந்து சாப்பிடவும்

யேய்க்குதிப்படி யஞ்சாருந்தை
யிருந்துமுழிக்குது பாருங்கடி. 52

மீனுமிருக்குது தூரணியிலிதை
மேய்ந்துதிரியுங் கலசவாயில்
தேனுமிருக்குது போரையிலேயுண்ணத்
திகட்டுதில்லையே வாலைப்பெண்ணே. 53

காகமிருக்குது கொம்பிலேதான்கத்த
காவலிருக்குது தெம்பிலேதான்
பார்க்கவெகுதூர மில்லையிதுஞானம்
பார்த்தால்தெரியுமே வாலைப்பெண்ணே. 54

கும்பிக்குளத்திலே யம்பலமாமந்தக்
குளக்கருவூரில் சேறுமெத்த
தெம்புமிடைகாட்டுப் பாதைகளாய்வந்து
சேர்ந்தாராய்ந்துபார் வாலைப்பெண்ணே. 55

பண்டுமேபாழக் கிணற்றுக்குள்ளேரண்டு
கெண்டையிருந்து பகட்டுதடி
கண்டிருந்துமந்தக் காக்காயுமஞ்சு
கழுகுகொன்றது பாருங்கடி. 56

ஆற்றிலேயஞ்சு முதலையடியரும்
புற்றிலேரண்டு கரடியடி
கூற்றனுமூன்று குருடனடிபாசங்
கொண்டுபிடிக்கிறான் வாலைப்பெண்ணே. 57

முட்டையிடுகு தொருபறவை
மோசம்பண்ணு தொருபறவை
வட்டமிட்டோர் கன்னியில்ரண்டு
மானின்றுதவிக்குது வாலைப்பெண்ணே. 58

அட்டமாவின்வட்டம் பொட்டலிலேரெண்டு
அம்புவிநிற்குது தேர்மேலே

திட்டமாய்வந்து அடிக்குதில்லைதேகம்
செந்தணலானதே வாலைப்பெண்ணே. 59

முக்கோணவட்டக் கிணற்றுக்குள்ளேமூல
மண்டலவாசிப் பழக்கத்திலே
அக்கோணவட்டச் சக்கரத்தில்வாலை
யமர்ந்திருக்கிறாள் வாலைப்பெண்ணே. 60

இரண்டுகாலொரு கோபுரமாம்நெடு
நாளாயிருந்து அமிழ்ந்துபோகும்
கண்டபோதுகோ புரமிருக்கும்வாலை
காணவுமெட்டா நிலைக்கவொட்டாள். 61

அஞ்சுபூதத்தை யுண்டுபண்ணிக்கூட்டி
ஆறாதாரத்தை யுண்டுபண்ணி
கொஞ்சம்பெண்ணாசை யுண்டுபண்ணிவாலை
கூட்டுறாள்காலனை மாட்டுகிறாள். 62

காலனைக்காலா லுதைத்தவளாம்வாலை
ஆலகாலவிஷ முண்டவளாம்
மாளாச்செகத்தைப் படைத்தவளாமிந்த
மானுடன்கோட்டை யிடித்தவளாம். 63

மாதாவாய்வந்து அமுதந்தந்தாள்மனை
யாட்டியாய்வந்து சுகங்கொடுத்தாள்;
ஆதரவாகிய தங்கையானாள்நமக்
காசைகொழுந்தியு மாமியானாள். 64

சிரித்துமெல்லப் புரமெரித்தாள்வாலை
செங்காட்டுச்செட்டியைத் தானுதைத்தாள்
ஒருத்தியாகவே சூர்தனைவென்றாள்
ஒற்றையாய்க்கஞ்சனைக் கொன்றுவிட்டாள். 65

இப்படியல்லோ விவள்தொழிலாமிந்த
ஈனுமலடி கொடுஞ்சூலி

மைப்படுங்கன்னியர் கேளுங்கடி
வயசுவாலை திரிசூலி. 66

கத்திபெரிதோ யுறைபெரிதோவிவ்ள்
கண்ணுபெரிதோ விவள்பெரிதோ
சத்திபெரிதோ சிவம்பெரிதோநீதான்
சற்றேசொல்லடி வாலைப்பெண்ணே. 67

அன்னம்பெரிதல்லால் தண்ணீர்பெரிதில்லை
அப்படிவாலை பெரிதானால்
பொன்னுபெரிதல்லால் வெள்ளிபெரிதில்லை
பொய்யாதுசொல்லுறேன் கேளுங்கடி. 68

மாமிசமான லெலும்புமுண்டுசதை
வாங்கிலோடு கழன்றுவிடும்
ஆமிசப்படி சத்தியென்றேவிள
யாடிக்கும்மி யடியுங்கடி 69

பண்டுமுளைப்ப தரிசியேயானாலும்
விண்டுமிபோனால் விளையாதென்று
கண்டுகொண்டுமுன் னவ்வைசொன்னது
வுண்டோவில்லையோ வாலைப்பெண்ணே. 70

மண்ணுமில்லாமலே விண்ணுமில்லைகொஞ்சம்
வாசமில்லாமலே பூவுமில்லை
பெண்ணுமில்லாமலே யாணுமில்லையது
பேணிப்பாரடி வாலைப்பெண்ணே. 71

நந்தவனத்திலே சோதியுண்டுநிலங்
காத்தபேருக்கு நெல்லுமுண்டு
விந்தையாய்வாலையைப் பூசிக்கமுன்னாள்
விட்டகுறைவேணும் வாலைப்பெண்ணே. 72

வாலையைப்பூசிக்கச் சித்தரானார்வாலைக்
கொத்தாசையாய்ச்சிவ கர்த்தரானார்

வேலையைப்பார்த்தல்லோ கூலிவைத்தாரிந்த
விதந்தெரியுமோ வாலைப்பெண்ணே. 73

வாலைக்குமேலான தெய்வமில்லைமானங்
காப்பதுசேலைக்கு மேலுமில்லை
பாலுக்குமேலான பாக்கியமில்லைவாலைக்
கும்மிக்குமேலான பாடலில்லை. 74

நாட்டத்தைக்கண்டா லறியலாகுமந்த
நாலாறுவாசல் கடக்கலாகும்
பூட்டைக்கதவைத் திறக்கலாகுமிது
பொய்யல்லமெய்யடி வாலைப்பெண்ணே. 75

ஆணும்பெண்ணுங்கூடி யானதிறைற்பிள்ளை
ஆச்சுதென்றேநீரும் பேசுகின்றீர்
பெண்ணுமாணுங்கூடி யானதல்லோபேத
மற்றொருருவித்தாச்சு வாலைப்பெண்ணே. 76

இன்றைக்கிருப்பதுவும் பொய்யல்லவேவீடு
யென்வாழ்க்கையென்பதும் பொய்யல்லவே
அன்றைக்கெழுத்தின் படிமுடியும்வாலை
ஆத்தாளைப்போற்றடி வாலைபெண்ணே. 77

வீணாசைகொண்டு திரியாதேயிது
மெய்யல்லபொய்வாழ்வு பொய்க்கூடு
காணாதவாலையைக் கண்டுகொண்டால்காட்சி
காணலாமாகாய மாளலாமே. 78

பெண்டாட்டியாவதும் பொய்யல்லவோபெற்ற
பிள்ளைகளாவதும் பொய்யல்லவோ
கொண்டாட்டமான தகப்பன்பொய்யேமுலை
கொடுத்ததாயும் நிசமாமோ. 79

தாயும்பெண்டாட்டியுந் தான்சரியேதன்யம்
தாமேயிருவருந் தாங்கொடுத்தார்

காயும்பழமுஞ் சரியாமோவுந்தன்
கருத்தைப்பார்த்துக்கொள் வாலைப்பெண்ணே. 80

பெண்டாட்டிசந்தை மட்டும்வாருவாள்பெற்ற
பிள்ளைமசானக் கரையுமட்டும்
தெண்டாட்டுத்தர்மம் நடுவிலேவந்து
சேர்ந்துபரகதி தான்கொடுக்கும். 81

பாக்கியமும்மவள் யோக்கியமும்ராச
யோக்கியமும்வந்த தானாக்கால்
சீக்கிரந்தருமஞ் செய்யவேண்டுங்கொஞ்சந்
திருப்பணிகள் முடிக்கவேண்டும். 82

திருப்பணிகள் முடித்தோருஞ்செத்துச்
சாகாதபேரி லொருவரென்றும்
அருட்பொலிந்திடும் வேதத்திலேயவ்வை
அறிந்துசொன்னாளே வாலைப்பெண்ணே. 83

மெத்தைதனிலே படுத்திருந்துநாமும்
மெல்லியருடன் சிறக்கும்போது
யுத்தகாலன்வந்து தாவிப்பிடித்தால்நாமும்
செத்தசவமடி வாலைப்பெண்ணே. 84

ஏழைபனாதிக ளில்லையென்றாலவர்க்
கிருந்தாலன்னங் கொடுக்கவேண்டும்
நாளையென்றுசொல்ல லாகாதேயென்று
நான்மறைவேத முழங்குதடி. 85

170772

பஞ்சைப்பனாதியை யடிக்காதேயந்த
பாவந்தொலைய முடியாதே
தஞ்சமென்றோரைக் கெடுக்காதேயார்க்கும்
வஞ்சனைசெய்ய நினையாதே. 86

கண்டதுங்கேட்டதுஞ் சொல்லாதேகண்ணில்
காணாதவுத்தரம் விள்ளாதே

பெண்டாட்டிக்குற்றது சொல்லாதேபெற்ற
பிள்ளைக்கிளப்பங்கள் கொடுக்காதே. 87

சிவனடியாரை வேதியரைச்சில
புலவர்ஞான பெரியோரை
மவுனமாகவும் வையாதேயவர்
மனதுநோகவும் செய்யாதே. 88

வழக்கழிவுகள் சொல்லாதேகற்பு
மங்கையர்மேல்மனம் வையாதே
பழக்கவாசியைப் பார்த்துக்கொண்டுவாலை
பாதத்தைப்போற்றடி வாலைப்பெண்ணே. 89

கூடியபொய்களைச் சொல்லாதேபொல்லா
கொலைகளவுசெய்யலாகாதே
ஆடியபாம்பை யடியாதேயிது
அறிவுதானடி வாலைப்பெண்ணே. 90

காரியனாகிலும் வீரியம்பேசவும்
காணுதென்றவ்வை சொன்னாளே
பாரினில்வம்புகள் செய்யாதேபுளியம்
பழம்போலுதிர்ந்து விடுந்தானே. 91

ராசாக்கள்பகை செய்யாதேநடுக்
காட்டுப்புலிமுன்னே நில்லாதே
தேசாந்திரங்களுஞ் செல்லாதேமாய்கைத்
தேவடியாள்தனம் பண்ணாதே. 92

தன்வீடிருக்க அசல்வீடுபோகாதே
தாயார்தகப்பனை வையாதே
உன்வீட்டுக்குள்ளே பூதமிருக்கையில்
ஓடித்திரியுறாய் வாலைப்பெண்ணே. 93

சாதிபேதஞ்சொல்லுகிறீர் தெய்வம்
தானென்றெருருவுடல் பேதமுண்டோ
ஓதியபாலதி லொன்ருகியதில்
உற்பத்திநெய்தயிர் மோராச்சு. 94

பாலோடுமுண்டு பூனையுமுண்டு
மேலாகக்காணவுங் காண்பதில்லை
மேலாந்தவாசையைத் தள்ளிவிட்டுமனதில்
வேண்டிப்பூசையைச் செய்திடுங்கள். 95

கோழிக்காறுகா லென்றுசொன்னேன்கிழக்
கூளிக்குமூன்றுகா லென்றுசொன்னேன்
கூளிக்கிரண்டெழுத்தென்று சொன்னேன்முழும்
பானைக்குவாயில்லை யென்றுசொன்னேன். 96

ஆட்டுக்கிரண்டுகா லென்றுசொன்னேனம்
மானைக்குப்பானைக்கு நிற்குமேல்சூல்
மாட்டுக்குகாலில்லை யென்றுசொன்னேன்கதை
வகையைச்சொல்லடி வாலைப்பெண்ணே. 97

கோயிலுமாடும் பறித்தவனுங்களறி
கூற்றுமேகற் றிருந்தவனும்
வாயில்லாக்குதிரை கண்டவனுமாட்டு
வகைதெரியுமோ வாலைப்பெண்ணே. 98

இத்தனைசாத்திரந் தான்படித்தோர்செத்தா
ரென்ருலுலகத் தோர்கள்சிரிப்பார்
செத்துப்போய்க்கூடக் கலக்கவேண்டுமவன்
தேவர்களுடனே சேரவேண்டும். 99

உற்றதுசொன்ன லற்றதுபொருந்தும்
உண்டோஉலகத்தி லவ்வைசொன்னுள்

அற்றதுபொருந்து முற்றதுசொன்னால்
அவனேகுருவடி வாலைப்பெண்ணே. 100

பூரணநிற்கும் நிலையறியான்வெகு
பொய்சொல்வான்கோடி மந்திரஞ்சொல்வான்
காரணகுரு மவனுமல்லவிவன்
காரியகுரு பொருள்பறிப்பான். 101

எல்லாமறிந்தவ ரென்றுசொல்லியிந்த
பூமியில்முழு ஞானியென்று
உல்லாசமாக வயறுபிழைக்கவிவர்
ஓடித்திரியுறார் வாலைப்பெண்ணே. 102

ஆதிவாலைபெரி தானாலுமவள்
அக்காள்பெரிதோ சிவன்பெரிதோ
நாதிவாலைபெரி தானாலுமவள்
நாயகனல்ல சிவம்பெரிது. 103

ஆயுசுகொடுப்பாள் நீரிழிவுமுதல்
கண்டதுமற்ற வியாதியெல்லாம்
பாசுபறந்திடும் பில்லிவினவடி
பத்தினிவாலைப்பெண்பேரைச்சொன்னால். 104

நித்திரைதன்னிலும் வீற்றிருப்பாளெந்த
நேரத்திலும்வாலை முன்னிருப்பாள்
சத்துருவந்தாலும் தள்ளிவைப்பாள்வாலை
யுற்றகாலனையுந் தானுதைப்பாள். 105

பல்லாயிரங்கோடி யண்டமுதல்பதி
னான்குபுவன மூர்த்திமுதல்
எல்லாம்தானப்படைத்தவளாம்வாலை
யெள்ளுக்குளெண்ணெய்போல் நின்றவளாம். 106

தேசம்புகழ்ந்திடும் வாலைக்கும்மித்தமிழ்
செய்யவெனக்குப தேசஞ்செய்தாள்
நேசவான்வீரப் பெருமாள்குருசாமி
நீள்பதம்போற்றிக் கொண்டாடுங்கடி. 107

ஆறுபடைப்புகள் வீடுகளைசூத்திர
வஞ்செழுத்துக்கும் வகையறிந்து
கூறுமுயர்வல வேந்திரன்துரைவள்ளல்
கொற்றவன்வாழக் கொண்டாடுங்கடி. 108

ஆடுங்கள்பெண்டுக ளெல்லோருமந்த
அன்பானகொங்கணர் சொன்னதமிழ்
பாடுங்கள்சித்தர்க ளெல்லோரும்வாலைப்
பாதத்தைப்போற்றிக் கொண்டாடுங்கடி. 109

சித்தர்கள்வாழி சிவன்வாழிமுனி
தேவர்கள்வாழி ரிஷிவாழி
பத்தர்கள்வாழி பதம்வாழிகுரு
பாரதிவாலைப்பெண் வாழியவே. 110

வாலைக்கும்மி

முற்றிற்று.

சிவமயம்.

உரோமரிஷி ஞானம்

மூலவட்டமான குரு பாதங்காப்பு
முத்திக்குவித்தான முதலேகாப்பு
மேலவட்டமானபரப் பிரமங்காப்பு
வேதாந்தங்கடந்துநின்ற மெய்யேகாப்பு
காலவட்டந்தங்கிமதி யமுர்தப்பாலைக்
கண்டுபசியாற்றிமனக் கவடுநீக்கி
ஞாலவட்டுஞ்சித்தாடும் பெரியோர்பாதம்
நம்பினதாலுரோமனென்பேர் நாயன்றானே. 1

கண்ணாடிசிலமூடித் தனுப்பினாலே
கருவதனையறியாமல் மாண்டுபோனான்
விண்ணாடிப்பாராத குற்றம்குற்றம்
வெறுமண்ணாய்ப்போச்சுதவன் வித்தையெல்லா

ஒண்ணானமவுனமென்ற யோகம்விட்டால் [ம
ஒருபோதுஞ்சித்தியில்லை வாதந்தானும்
பெண்ணார்தன்னாசைதன்னை விட்டுவந்தால்
பேரின்பமுத்திவழி பேசுவேனே. 2

பேசுவேனிடகலையே சந்திரகாந்தம்
பின்கலைதானுதித்த ஞாதியாச்சு
நேசமதாய்நடுவிருந்த சுடர்தானீங்கி
நீங்காமலொன்றான லதுதான்முத்தி
காதலாய்ப்பார்த்தோர்க்கு இதுதான்மோட்சங்
காணாதபேர்க்கென்ன காமதேகஞ்
சோதனையாயிடமலையி லேறவாங்கி
சுழிமுனையில்கும்பித்துச் சொக்குவீரே. 3

வாங்கியந்தப்பன்னிரண்டி னுள்ளேரேசி
வன்னிநின்றவிடமல்லோ சூரியன்வாழ்க்கை
யோங்கியிந்தரென்றிடமு மறிந்தேன்யோகி
உற்றபரமடிதானே பதினாருகுந்
தாங்கிநின்றகாலடிதான் பன்னிரண்டு
சார்வானபதினாறில் மெள்ளவாங்கி
யேங்கினதைப்பன்னிரண்டில் நிறுத்தியூது
எழுந்தபுரியட்ட மடங்கித்துப்பாரே. 4

பாரையாகுதிரைமட்டம் பாய்ச்சல்போச்சு
பரப்பிலேவிடுக்காதே சத்தந்தன்னை
நேரய்யாரெண்டிதழி னடுவேவைத்து
நிறைந்தசதாசிவனாரைத் தியானம்பண்ணு
கூரையாஅங்குலந்தா னாலுஞ்சென்றால்
குறிக்குள்ளேதானடக்கிக் கொண்டுதய்யா
ஆரையாஉனக்கீடு சொல்லப்போறேன்
அருமையுள்ளவென்மகனேனென் றழைக்கலாமே. 5

அழைப்பதுவுநல்லபிள்ளை யானல்நன்று
ஆகாதசீடர்களை சேர்த்தால்தோஷம்
பிழைப்பதற்குவழிசொன்னல் பார்க்கமாட்டான்
பெண்டாட்டிமனங்குளிரப் பேசுமாடு
உழைப்பதற்குச்செனனமெடுத் தானேயல்லால்
உதவிதனக்கெவ்வளவு முண்டோவில்லை
யிழைப்பமிவன்பேச்சையடிக் கடிதானுகு
மேதுக்குச்சொல்லுகிறே மினிமேல்தானே. 6

மேலென்னவிருக்கையிலும் நடக்கும்போதும்
வேறுரையால்சாரங்கள் விடாமலேற்று
நாலென்னவெட்டென்ன வெல்லாமொன்று
நலமான அஷ்டாங்கமப்யாசித்துக்
காலென்னபிராணய முன்னேசெய்யில்
கணக்காகப்பூரகமாங் கும்பகமேநாலு
கோலென்னரேசகந்தா னென்றுமூன்று
குறையாமற்சரபீசங் கூட்டித்தீரே. 7

கூட்டியேபழகினபின் சரபீசத்தில்
குறையாமல்சாதித்தால் பிரமாந்திரங்
காட்டிக்குவிக்குமல்லால் விழிக்குறியினலே
கண்மூக்குமத்தியிலே கண்டுபாரு
மூட்டிவிக்குமாதார மாறுந்தானே
மூலவட்டகணபதிநான் முகத்தோன்மாயன்
தாட்டிகமணிப்பூரங் கையன்வட்டந்
தணலானருத்திரனுந் தணலுமாமே. 8

தணலாகும்விசுத்தியறு கோணவட்டஞ்
சதாசிவனர்வட்டமல்லோ குருபீடந்தான்
மனையானபதியினிலே குறித்துப்பார்க்க
மத்தியமுதல்கரிகொண்டு தூங்குந்தூங்கும்

கனலேறிக்கொண்டிருந்தா லெல்லாமுண்டு
காற்றைவெளிவிட்டாக்கால் கருமதீதான்
புனலூரும்வழிபாதை யிந்தமார்க்கம்
பொல்லாததுரோகிக்குப் பொய்யாமன்றே. 9

செலுத்துவதுஉண்ணாக்கி லண்ணாக்கையா
சென்றேறிப்பிடரிவழித் தியானந்தோணும்
வலுத்ததடாநாலுமுனக் கமுதமாச்சு
மவுனமென்றநிருவிகற்ப வாழ்க்கையாச்சு
சொலித்திருக்கும் பன்னிரண்டிலிருத்தியூது
சோடசமாம்சந்திரகலை தேய்ந்துபோச்சு
பலித்துதடாயோகசித்தி ஞானசித்தி
பருவமாய்நாடிவைத்துப் பழக்கம்பண்ணே. 10

மூடாமல்சிரிதுமன முகப்பாடம்பண்ணி
முழுதுமவன்வந்ததுபோல் பிரசங்கித்து
வீடேதுஉடலேது யோகமேது
வீண்பேச்சாசொல்லியல்லோ மாண்டுபோனார்
காடேறிமலையேறி நதிகளாடிக்
காய்கிழங்குசருகுதின்று காமத்தியா
சூடேறிமாண்டவர்கள் கோடாகோடி
சொரூபமுத்திபெற்றவர்கள் சுருக்கமாச்சே. 11

சுருபமுத்திக்கடையாள மேதென்றாக்கால்
சுடர்போலேகாணுமடா தூலதேகம்
அருபமுத்தியிடமல்லோ பிரமஞான
மபரோட்சமென்றுசொல்லுஞ் சிரவணந்தான்
பருபதத்தைஅசைப்பனெனச் சிற்றெறும்பின்
பழங்கதைபோலாச்சுதிந்த யோகம்விட்டால்
வெறுங்கடத்திலீப்புகுந்த வாறுபோலே
வேதாந்தமறியாத மிலேச்சர்தானே. 12

ஓமென்றகெட்டபுத்தி மாணுக்காளே
உலகத்தில்மானிடர்க்கு ஆண்டுநூறு
ஆமென்றுஇருபத்தோ ராயிரத்து
அறுநூறுசுவாசமல்லோ ஒருநாளைக்குப்
போவென்றுபோனதினல் நாள்குறைந்து
போச்சுதுபோகாவிட்டால் போறதில்லை
தாமொன்றுநினைக்கையிலே தெய்வமொன்று
தானினைந்ததன்மையல்லோவிதிகள்தானே. 13

உரோமரிஷிஞானம் முற்றிற்று.

ஔவைக் குறள்

மூலமும் உரையும்

இதன் விலை ரூபா 1.

இந்நூல் வரகவிகளில் சிறந்த ஔவையாரருளிய ஆன்மஞான நூல். இது திருக்குறளைப்போல் பண்டிதர்களும், பாவலர்களும் உரையெழுதக் கூடியதன்று. இது ஆன்மஞான சாதனைகளைப் புகட்டும் நூல். ஆன்மஞான இன்பத்தை அவாவி அம்மெய்ச் சுகத்தில் ஈடுபடும் மெய்யன்பர்களுக்கே இதுபெரிதும் பயன் அளிக்கும். இத்தகைச் சிறப்புவாய்ந்த நூலுக்கு சென்னை பிரம்ம வித்தியாசங்க ஸ்தாபகரும், அச்சங்கத்தின் குருவுமாகிய ஸ்ரீல ஸ்ரீ - ஈ. சுந்தர **மாணிக்க யோகீஸ்வரர்** அவர்கள் தாம் ஐம்பது ஆண்டுகளாய் உழைத்துப் பெற்ற சிறந்த ஆன்மஞான அனுபவத்தைக்கொண்டு உரையெழுதியது. இதில் வியோமசக்கரம் அல்லது குண்டலி என்னும் படமும் விநாயகசொரூபம் என்னும் படமும் ஆகிய இரண்டு படங்களுடன் உரையாசிரியர் படமும் சேர்த்து அழகாய் அச்சிட்டு பயிண்டுசெய்யப் பெற்றுள்ளது.

விலாசம்:

அ. இரங்கசாமிமுதலியார் ஸன்ஸ்,

நெ, 24-தாண்டவராயப்பிள்ளை தெரு, சென்னை.